1970 ஆகஸ்ட் 27]

கொண்டு நல்ல வருமானம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல் அரசாங்கமும் ஆம்னி பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னை நகரத்தில் ஓடு கின்ற பஸ்களின் மூலம் ஏற்படுகின்ற நஷ்டத்தை இப்படி ஆம்னி பஸ்கள் விடுவதன் மூலம் சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்னி பஸ்களைப் பற்றிய கேள்விக்கும், இந்த மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனவே, இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரமாகப் பதில் சொல்லலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், சென்னையில் தற் சமயம் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்களுக்காக தனி பஸ்களை விடுகிறார்கள். அதே போன்று . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி இதைப் பற்றியது. அப்பொழுது இந்தக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. டி. மார்டின் : இந்தக் கேள்வியோடு தொடர்பாகத்தான் போடுகிறேன். சென்னையில் லேடீஸ் ஸ்பெஷல் என்று பஸ்கள் விடப்படுகின்றன. அதேபோன்று, இந்த 'கோ ஆப்பரேட்டிவ் ப்ளீஸ் பஸ் களையும் லேடீஸ் ஸ்பெஷல் என்ற முறையில் பெண்கள் அப்படி சுற்றிவரக்கூடிய அளவில் விடுவதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

(பதில் இல்லை).

*77 Q.—THIRU K. CHEEMAICHAMY;
THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether Government is now contemplating to run special buses in the Madras City for Women only; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை குறிப் பிட்ட சில வழித்தடங்களில், சோதனை அடிப்படையில் மக ளிருக்கும், சிறார்களுக்குமென்றே, தனிப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவை காலை 8-00 மணி முதல் 11-00 மணி வரையிலும், மாலை 3-00 மணி முதல் 7-00 மணி வரையிலும், சிறப்பு அறிவிப்புப் பலகைகளுடன் ஓடுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் பேருந்து முயற்சி நல்ல முயற்சி. இதே முறையில் ஜனநெருக்கமுள்ள மதுரை, கோவை, திருச்சி போன்ற இடங் களிலும் இந்த மகளிர் பேருந்துகளை விட அரசாங்கம் முன்வருமா? அந்த மகளிர் பேருந்துகளில் மகளிரையே கண்டக்டர்களாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மகளிருக்காக தனியாக விடப்படுகிற பஸ்களைப்பற்றி பாராட்டியதற்கு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் ஸ்பெஷல் பஸ்களுக்கு இப்பொழுது சென்னை நகரத்தில் பிரயாணிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துக்கொண்டு வருகிறது. பெண் கண்டக்டர்களைப் போடுகிற விஷயத்தைப்பற்றித் தனியாக ஆலோசிக்கலாம். தற்பொழுது இருக்கிற சூழ்நிலையில் பெண் கண்டக்டர்களை நியமிப்பது அவ்வளவு சாத்தியமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

Altercation between passengers and driver of State Transport Bus.

* 78 Q.—THIRU K. VINAYAKAM :
DR. H. V. HANDE :

Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there was a dispute and heated exchanges between the passengers and transport workers in Theagarayanagar, Madras, in route No. 11-B on 9th December 1969;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) how the dispute was settled?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 9–12–1969 அன்று மாலை 5 மணியளவில் பாரிமுனையிலிருந்து 11-பி என் வழித்தடத்தில் செல்லும் எ. 742-ம் எண்ணுள்ள பேருந்தை அதன் வலவர், இராகவய்யா சாலையிலுள்ள பேருந்து நிறுத்துமிடத்தில் நிறுத்தவில்லை. எனவே, பயணிகள் கலக்கமுற்றனர். அதைத் தொடர்ந்து அவர்களுக்கும் வலவருக்குமிடையே சச்சரவு எற்பட்டது.

(உ) விசாரணை நடத்தப்பட்டதில் வலவர் தவறு செய்ததாக முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, இரண்டாண்டுக் கால அளவுக்கு அவருடைய சம்பள உயர்வு தொடர்ந்து தள்ளிப்போடுமாறு தள்ளிப் போடப்பட்டது.

DR. H. V. HANDE : Is it not a fact that there is constant friction between conductors and the passengers and especially in recent times is it not a fact that because of the restriction of 25 standing passengers there has been lot of misunderstanding and the whole transport machinery is in a chaotic condition. What is the position of Government? What efforts are they going to make to see that at least hereafter there is proper relationship between passengers and conductors? Hov are the Government going to see that more number of passengers travel by the State Transport comfortably?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : போக்குவரத்துத் துறையில் பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்னை சென்னை மாநகரத்தைப் பொறுத்திருக்கிற பிரச்னை.